# தொம்பே பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 27 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 சனவரி 09 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொம்பே பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 165,705 தொகையான புத் யவ ங்கொடைக் கணக்கிற்குச் சீராக்கப்படுவதற்குப் பதிலாக மூலதனச் செலவினத்திற்கு வருமானத்திலிருந்து பங்களிப்புச் செய்யும் கணக்கிற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் மீளாய்வாண்டின் போது ரூபா 106,352,355 தொகையும் ரூபா 62,717,832 தொகையும் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்படும் கிரிந்திவெல மற்றும் பூகொட வாரச் சந்தை சபையின் சொத்தொன்றாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் வங்கிக் கூற்றின் படி ரூபா 595,646 தொகையான கடன் தவணைப்பணமும் வட்டித் தொகையும் கழிக்கப்பட்டிருந்த போதிலும் செலுத்தப்பட வேண் யவ ங்கி மற்றும் வட்டியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) நிலையான சொத்துப் பதிவேட்டின் படி சபையிடம் உள்ள ரூபா 5,319,869 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

©HARAN Graph முன்னைய ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் வங்கி கணக்கிணக்கத்தின் வேறு செலவினத்தின் கீழ் காணப்பட்ட பொறுப்புகளான ரூபா 19,884,367 தொகை அவ்வாண்டின் கணக்கிடப்படாமை மற்றும் அக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்கிடப்படுவதற்காக 2011 இற்காக திருத்தப்பட்ட காசேடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி காசேடு வரவு வைக்கப்பட்டு மீளச் செலவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியம் ரூபா 19,884,367 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

©HARAN Graph பெறவேண்டிய சம்பளம் மீள்நிரப்பல் பதிவேட்டின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 4,418,641 ஆகக் காணப்பட்ட போதிலும் பேரேட்டின் படி ரூபா 3,298,932 தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்ற நீதிமன்றத் தண்டப் பணமான ரூபா 141,499 தொகையும் 2008 முதல் 2012 வரை கிடைக்கப்பெற்ற முத்திரை வருமானமான ரூபா 108,114 தொகையும் வைப்புக் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை**

(அ) முன்னைய ஆண்டின் வருமானச் செலவினக் கணக்கின் படி ரூபா 8,267,179 ஆகக் காணப்பட்ட பற்றாக்குறை சீராக்கப்பட்டதை அடுத்து ரூபா 856,382 தொகையான மிகை பெறப்பட்டிருந்ததுடன் இதற்காக அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்புப் பதிவுகள் அல்லது தெளிவாக்கங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட காசுக் கணக்கிற்கு ரூபா 2,884,367 தொகை வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் செலவு வைக்கப்பட்ட கணக்குகள் இனங்காணப்பட முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,606,421 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,020,899 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 5,723 | 6,698 | 5,099 |
| (ii) | வாடகை | 12,309 | 12,118 | 564 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 25 |
| (iv) | ஏனைய வருமானம் | 66,266 | 86,083 | 16,875 |

### 2.2.2 வீத வரி

உப அலுவலகங்களின் 05 ஆண்டுகள் கடந்த நிலுவை வீதவரி மற்றும் ஏக்கர் வரி தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| உப அலுவலகம் | வீதவரி | ஏக்கர் வரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வேகே | 1,657,076 | 34,746 |
| தொம்பே | 2,253,070 | 76,954 |
| கூறுகல | 91,818 | 28,487 |
| பூகொட | 1,235,782 | 30,633 |

### 2.2.3 கடை வாடகைக்கிடல்

11 கிரிந்திவெல புதிய வியாபாரத் தொகுதியின் கடைகள் 2013 யூலை 23 கணக்காய்வுத் தினம் வரையிலும் கேள்வி வழங்குனர் வாடகைக்கு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகத்தின் ரூபா 26,872,102 தொகையான கையிலுள்ள காசு மீதி காணப்பட்டதுடன் அத் தொகை சபைக்கு வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் குறுங்கால அல்லது வைப்பில் முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையால் ஒன்று ரூபா 100,000 படி மக்கள் வங்கியின் 10 ஆஸ்சர்யா சேமிப்புச் சான்றிதழ்கள் 2010 திசெம்பர் 01 ஆம் திகதி ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 12 மாதங்கள் பூர்த்தியானதும் 5% ஆன வருடாந்த வட்டியுடன் ஆரம்பப் பணம் மீளப் பெறப்பட்டு புதிய கணக்கொன்று ஆரம்பிக்கப்பட முடியும் என சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கால முதிர்வின் போது பணம் பெறப்பட்டு கூடிய வட்டியை வழங்கும் நீண்ட கால முதலீட்டு மார்க்கத்தில் முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2011 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் 2012 திசெம்பர் 01 வரை 3.8% வட்டிக்கு சேமிப்புச் சான்றிதழ்களிலேயே வைத்துக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது அழிக்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்த 32 பொருட்களை அழிப்பதற்காகவும் கணக்குகளிலிருந்து அகற்றப்படுவதற்காகவும் (2013 யூலை 13) ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரண்டு வங்கிக் கணக்குகளில் 6 முதல் 8 வருடங்கள் வரையான காலத்தின் போது எவ்வித கொடுக்கல்வாங்கல்களும் மேற்கொள்ளப்படாது ரூபா 239,579 தொகை செயற்பாடற்ற காசு மீதியாகக் காணப்பட்டது.

## 2.4 ஒப்பந்த நிர்வாகம்

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் உதவியில் ரூபா 12,655,752 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பூகொட நூலக கட்டிடம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்குகளின் படி 9 மாத காலமாக சகல நிர்மாணிப்பு நடவடிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் முடிவுறுத்தல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படுவதற்கு 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது.

(ஆ) கடன் கொடுப்பனவு சலுகைக் காலம் 2 ஆண்டுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக 3 ஆண்டுகளுக்குக் கிட்டிய காலம் கடந்திருந்ததுடன் நூலகம் 2013 ஆகஸ்ட் 28 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 செப்தெம்பர் 25 ஆம் திகதி ஆலோசனை நிறுவகத்தின் உத்தியோகத்தர், செயற்திட்டப் பொறியியலாளர், வேலை அதிகாரி, தொழிநுட்ப உத்தியோகத்தர் என்போரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி செயற்திட்ட நிர்மாணிப்புகளின் குறைபாடுகள் பாரியளவில் இனங்காணப்பட்டிருந்ததுடன் அக் குறைபாடுகள் 2013 ஆகஸ்ட் வரையிலும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. எவ்வாறெனினும், இறுதிக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தயாரிக்கப்படுவதற்காக ரூபா 260,286 தொகையான 10 சதவீதமான பிடித்து வைத்தல் பணம் போதுமானதா என்பது சர்ச்சைக்குரிய தன்மையிலானதாகக் காணப்பட்டது.

## 2.5 காணிகளைக் கூறாக்கி விற்பனை செய்தல்

காணிகளைக் கூறாக்கி விற்பனை செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) 1998 நவம்பர் 13 ஆம் திகதிய 1053/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி காணிகளைக் கூறாக்கி விற்பனை செய்கையில் உரிய காணிகளில் பொது வசதிகளை அபிவிருத்தி செய்வது கட்டாயமானதாக்கப்பட்ட போதிலும் கொமிலாவத்த/ இதுரகல்ல, கந்தஹேவத்த ரந்தாவான, பெலிகொல்ல வத்த, மாலிகாவத்த மெத்தேகம எனும் காணிகள் கூறாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் மின்சார வழங்கல், நிலையான கால்வாய் முறைமைத் தயாரிப்பு, அடிப்படை நீர் வசதிகள் வழங்கப்படல், வீதியை முறைப்படுத்தல் போன்றவை தொடர்பாக எழுத்து மூலச் சான்றுகள் பெறப்பட்டிராததுடன் அச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தலைவரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந் நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளேனும் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

(ஆ) மேற்குறித்த காணிகள் கூறாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் திட்டக்குழவின் பரிந்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) துணைக்கூறாக்கப்படும் காணியின் அளவு 01 ஹெக்டேயருக்கு மேலதிகமான 04 ஹெக்டேயருக்குக் குறைவில்லாத வீதிகளுக்கு ஒதுக்கப்பட்ட காணி தவிர்ந்த காணியின் 08 சதவீதத்திற்குக் குறைவற்ற அளவிலான பிரதேசம் மக்கள் சேவை மற்றும் விநோத விளையாட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் ஏலவிற்பனை செய்யப்பட்ட காணிகளில் 61.95 பேர்ச் அளவு குறைவாகப் பெறப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு பொறுப்பேற்கப்பட்ட கந்தேவத்த மற்றும் பெல்கொல்லவத்த எனும் காணிகளுக்கு உரித்தான முறையே 28.75 பேர்ச் மற்றும் 33.20 பேர்ச் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மாலிகாவத்த மெத்தேகம காணியின் ஒரு பேர்ச் ஏலவிற்பனைப் பெறுமதி ரூபா 60,000 தொகையும் ரூபா 75,000 தொகையுமானதுடன் பொது வசதிகள் காணிப் பெறுமதி கணக்கீடு செய்யப்படுகையில் ஒரு பேர்ச்சிற்கு ரூபா 14,680 படி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மாலிகாவத்த மெத்தேகம காணியின் பொது வசதிகள் காணி சபைக்கு ஒப்படைக்கப்படும் உறுதியின் படியும் காணி கூறாக்கப்படும் பதிவேட்டின் படியும் 23 பேர்ச்களான போதிலும் கணக்குகளில் நிலையான சொத்துக்களின் கீழ் 82.50 பேர்ச்சாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்துக்களின் முகாமைத்துவம்